எழுப்புதல் ஜெப ஐக்கியத்தின்

# ஐக்கிய மலர்

Volume No: 26 Issue No: 6 Bro.P.D.ஞானப்பிரகாசம் March - 2024

**ஆயுட்கால ஐக்கிய வாக்குத்தத்தம் :**

*சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்,*
*கர்த்தராகிய நான் ஏற்றகாலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்.*
*ஏசாயா 60:22*

**2024-ம் வருட ஐக்கிய வாக்குத்தத்தம் :**
**"உங்களைப்பார்க்கிலும் ஜனம் பெருத்த பலத்த ஜாதிகளை நீங்கள் துரத்துவீர்கள்."** உபாகமம் 11:23.

**"உங்கள் ஜாக்கிரதை அநேகரை எழுப்பிவிட்டதுமுண்டு."**
**II கொரிந்தியர் 9:2**



தனிப்பிரதி ரூ. 5.00
ஆண்டுச் சந்தா ரூ. 60.00

## மார்ச் மாத வாக்குத்தத்தம் : 2024

**"இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்".** ஏசாயா 60:2

மார்ச் மாத எச்சரிப்பின் வசனம்: **"எழும்பிப் பிரகாசி"** ஏசாயா 60:1

### உங்கள் சகோதரனிடமிருந்து...

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில், எழுப்புதல் ஜெபஐக்கிய ஊழியர்கள் மற்றும் தேவ பிரசன்னத்தை விரும்புகிற யாவருக்கும் வாழ்த்துகளை கூறிக் கொள்கிறேன்.

இப்புதிய மாதத்திலும், கர்த்தர் நம்மோடு கூட இருந்து பூமியில் உள்ள காரிருள் நம்மை சூழ்ந்துவிடாமல் பாதுகாப்பாராக ஆமென். இம்மாதத்திலும் நாம் அனைவரும் கடந்து வர வேண்டிய பாதையையும், நம் அபிஷேகத்தின் மூலம் நாம் தைரியமாய் ஊழியம் செய்யும் கிருபையையும் தருவாராக. கடந்த மாதத்திலே ஊழியங்களை செய்ய தேவன் பெலன் கொடுத்தார். இந்த மார்ச் மாதத்திலும் வழக்கமான ஊழியங்களும், மாவட்ட அளவில் உள்ள ஊழியங்களும் மற்றும் லெந்து கால சிறப்பு கூட்டங்களும் உண்டு. எல்லா ஊழியங்களையும் முழு ஐக்கியமாக இணைந்து செய்ய தேவன் பெலப்படுத்துவார். ஜெபக்கூடாரங்களில் உள்ள ஜெபங்களில் வந்து கலந்து கொள்ளுங்கள். தேவசித்தமானால் மே மாதம் 2,3,4 ஆகிய தேதிகளில் நமது 45வது ஆண்கள் தியான முகாம் சுரண்டையில் வைத்து நடைபெற இருக்கின்றது. அதிக ஜெபத்துடன் ஆண்கள் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கின்றோம். நம் தேசத்துடைய பாராளுமன்றத் தேர்தலில் தேவ சித்தம் நிறைவேறுவதற்காக இன்னும் நாம் ஜெபிக்க வேண்டும். நம் ஐக்கியத்தை பரிசுத்த ஆவியானவர் தொடர்ந்து வழி நடத்த வேண்டும். ஏசாயா 64:4 ன்படி பூமியெங்கும் இன்னும் நடைபெறாத ஊழியங்கள் நம் ஐக்கியத்தின் மூலமாய் நடைபெற்று ஒவ்வொருவரின் ஜாக்கிரதையான வாழ்க்கையை வைத்து எழுப்புதலை தேவன் கட்டளையிடப்போகின்றார். நம் ஐக்கியத்திற்கும், உங்களுக்கும் தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள் இன்னும் தீவிரமாக நிறைவேறப்போகின்றது. ஆகவே அதிகமாக தேவ சமூகத்திலே ஒவ்வொருவரும் காணப்படவும் ரோமர் 1:10ன்படி நாம் ஸ்திரப்படுவதற்கு ஏற்ற வரங்களை தேவன் தந்தருளும்படியாக தேவனை நோக்கி ஜெபிப்போம். நம் ஐக்கியத்தின் மூலமாக அநேக ஆவிக்குரியவர்களை தேவன் எழுப்பவும் அவர்கள் மூலமாக இன்னும் அநேகர் ஆவிக்குரியவர்களாக மாறவும், தேவசித்தம் இதனால் நிறைவேறவும் ஜெபிக்க வேண்டும்.

உங்களுடைய அன்றாட வாழ்க்கையில் வரும் பிரச்சனைகளை நீங்களே ஜெபித்து தீர்வு காண வேண்டும். சற்று கடினமான பிரச்சனைகளை ஐக்கியத்திற்கு தெரியப்படுத்தி ஜெப உதவியை பெற்றுக் கொள்ளுங்கள். இன்னும் ஏராளமான பேரை தேவன் ஐக்கியத்திற்குக் கொண்டு வரவும், ஐக்கிய வாக்குத்தத்தங்கள் அனைத்தும் நிறைவேறவும், நாம் விசுவாசம் உள்ளவர்களாக இருப்போம். இந்த ஆண்டிலும் தேவன் நம்மோடு பேசின வார்த்தைகளை வைத்து ஜெபிப்போம். இயேசுவின் வருகைக்கு இன்னும் அநேகரை நாம் ஆயத்தப்படுத்த வேண்டும். நிர்விசாரமாய் வாழ்கின்ற ஜனங்களை தேவன் சந்தித்து அவர்களையும் ஊழியர்களாக ஆசீர்வதிக்க வேண்டும். வருங்கால திட்டங்களை தேவன் நமக்கு வெளிப்படுத்தவும், அவைகளை தடை செய்யும் சாத்தானின் சூழ்ச்சிகள் அழிக்கப்படவும், உபவாசித்து ஜெபிப்போம். ஐக்கியத்தின் மூலமாக ஆண்டவரை ஏற்றுக்கொண்டு வாழும் ஒவ்வொருவரும் கர்த்தரின் ஊழியத்தைச் செய்ய வேண்டும். ஊழியர்களாகிய அனைவரும் ஆரோக்கியமாக வாழ்ந்து ஐக்கிய ஊழியத்தை செய்ய இன்னும் பாரத்துடன் ஜெபிப்போம். கர்த்தருக்கு சித்தமானால் இம்மாதம் 21ம் தேதி என்னுடைய 72வது பிறந்த நாளில் புதிய கிருபைகள் ஊற்றப்பட ஜெபியுங்கள்.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் இரவு 9.00 மணிக்கு google meet ல் இந்த link ல் https://meet.google.com/non-taah-nua ஜெபம் நடைபெறுகிறது.

கிறிஸ்துவின் பணியில்,
**P.துரைசிங் ஞானப்பிரகாசம்,**
ஆசிரியர், Cell: 90255 53614

வங்கி மூலம் காணிக்கை அனுப்புவோர், கீழ்க்கண்ட கணக்கு எண்ணில் அனுப்பி அதின் விபரத்தை ஐக்கியத்திற்கு தெரியப்படுத்துங்கள்.

STATE BANK A/c.No
Branch : Surandai
IFSC - SBIN0011065

Bro. **P.Duraisingh Gnanapragasam**
3 0 4 0 6 4 3 8 9 6 2

**Revival Prayer Fellowship Trust**
3 2 4 1 2 6 2 4 5 7 2

G pay
+919942950132

தொடர்புக்கு: சகோ. P.D.ஞானப்பிரகாசம் Cell: 90255 53614 | சகோதரி. S.சந்திரா ஞானப்பிரகாசம் Cell: 99653 36459 | சகோ. D.ஜோயல் Cell: 99429 50132

தேவ செய்தி

## "உங்கள் ஜாக்கிரதை அநேகரை எழுப்பிவிட்டதுமுண்டு" II கொரிந்தியர் 9:2

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உங்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதம் தேவ செய்தியாக, உங்கள் ஜாக்கிரதை அநேகரை எழுப்பிவிட்டதுமுண்டு என்ற தலைப்பில் யாரெல்லாம் ஜாக்கிரதையாக இருந்தார்கள் என்று அதன் மூலமாக ஏற்பட்ட எழுப்புதலை பற்றியும் தியானிப்போம்.

### I அநேகரை எழுப்பிவிட்ட பேதுரு, யோவான்: அப்.3:4

பேதுருவும், யோவானும் அவனை உற்றுப் பார்த்து; எங்களை நோக்கிப்பார் என்றார்கள். அப்போஸ்தலர் நாட்களில் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனிதன் பிச்சை கேட்பதற்காக அப்போஸ்தலர்களிடம் வந்தபோது அவர்கள் அவனுக்குப் பிச்சை கொடுக்காமல் தங்களை நோக்கிப் பார்க்கச் சொன்னார்கள், அவ்விதமாக அவன் அவர்களை நோக்கிப் பார்த்தபோது கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே சர்வாங்க சுகம் பெற்றதாக வேதம் கூறுகின்றது. இந்த அற்புத சுகம் நடந்ததற்கு காரணம் பேதுரு, யோவான் ஆகியோரின் ஜாக்கிரதையான ஊழியமாகும். இந்த ஊழியர்கள் ஜாக்கிரதையாய் சரியான நேரத்தில் இயேசுவின் நாமத்தை அறிக்கையிட்டதால் பிறவி சப்பாணிக்கு உடனடியாக விடுதலை கிடைத்ததை நாம் அறிவோம்.

இந்த நாட்களிலும் கர்த்தர் அற்புதங்களை உலகமெங்கும் செய்து வருகிறார். யார் யார் ஜாக்கிரதையாக இருக்கின்றோமோ அவர்களைக் கொண்டு இந்த அற்புதத்தை செய்கின்றார். தங்களை நோக்கிப் பார்க்க சொன்ன போது இயேசுவின் நாமமே அவர்களிடம் இருந்தது. இதுபோல நாம் அனைவரும் இயேசுவின் நாமத்தை அறிவிப்பிதற்கு ஜாக்கிரதையாக இருப்போமானால் பிறவி சப்பாணி போல ஏராளமான மக்களை இயேசுவண்டை வழி நடத்த முடியும். ஆண்டவர் நம் அனைவரையும் விசேஷமாக பயன்படுத்தும் காலத்தில் நாம் இருக்கின்றோம். இந்த நாட்களில் நமக்குள் இருக்க வேண்டியது இயேசு கிறிஸ்துவின் நாமமேயாகும். இந்த நாமத்தில் நாம் செய்கிற ஊழியத்தில் அநேகரை ஆண்டவருக்குள் எழுப்ப முடியும். இன்னும் ஜாக்கிரதையாக இருப்போமானால் நம் மூலமாக நல்ல உயிர்மீட்சியை நாம் செய்ய முடியும். ஆண்டவர் நம்மை பயன்படுத்துவதற்காக காத்திருக்கின்றார். நாம் யாரும் சோர்ந்து போகாமல் இன்னும் அதிகமாக ஜெபித்துக் கொண்டு இருக்கும் போது எழுப்புதல் வருவதற்குரிய சூழ்நிலையை நாம் காண முடியும். இதே அப்போஸ்தலர்கள் தங்களுக்கு என்ன கிடைக்கும் என்று இருந்த காலத்தில் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால் இயேசுவை முழுமையாக ஏற்றுகொண்டபோது அற்புதங்கள் சாதாரணமாக நடைபெற்றது. எழுப்புதல், அப்போஸ்தலர்கள் மூலமாகவே நடைபெற்றது. பேதுருவும், யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்றும் அறிந்து கொண்டார்கள் (அப்.4:13). இப்படிப்பட்ட தேவனுடைய கிரியைகள் நம்முடைய நாட்களிலே நடைபெற வேண்டும். யாருடைய சுவிசேஷத்திலும் மனந்திரும்பாதவர்கள் நாம் அறிக்கையிடுகிற இயேசுவின் நாமத்தில் நம்முடைய ஊழியத்தில் மனந்திரும்புவார்கள்.

இதுவரை இப்படிப்பட்ட கிரியைகள் நடைபெறா விட்டால் இனிமேல் நிச்சயமாக இப்படிப்பட்ட கிரியைகள் நம் ஒவ்வொருவரை கொண்டும் நிச்சயமாக நடைபெறும். நாம் சோர்ந்து போய் இருந்தாலும் கர்த்தர் நம்மையும் கரம் பிடித்து வழிநடத்துவார். சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன் அப்போஸ்தலர்களுடன் சாட்சியாக சேர்த்துக் கொள்ளப்பட்டப்படியால் யாரும் அப்போஸ்தலர்களை குற்றம் கண்டுபிடிக்க முடியாமல் போய் விட்டது. இவ்விதமான எழுப்புதல் உலக அளவில் தேவனால் நடத்த முடியும். இதற்கு நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் நாம் சின்னவனாக இருக்கின்றோமோ என்று நம்மை நாமே குறைத்து நினையாமல் விசுவாசத்தோடு கூட நம்மை தேவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். தேவன் நம் அர்ப்பணிப்பை ஆசீர்வதிப்பார். நம்முடைய ஜெப ஐக்கியத்திலும் கூட இருக்கின்ற ஒவ்வொருவரையும் கொண்டும் அவர்களின் ஜாக்கிரதையான வாழ்க்கையை வைத்தும் எழுப்புதலை தேவன் செய்வார். ஒவ்வொரு விசுவாசியும், ஊழியர்களும் தேவன் பயன்படுத்தும் பாத்திரங்களாக மாற போகின்றார்கள். 44 ஆண்டுகளாக ஆண்கள் தியான முகாம் மே மாதம் தோறும் பல்வேறு இடங்களில் நம் ஐக்கியத்தின் மூலமாக நடைபெற்று வருகின்றது. இன்னும் தொடர்ந்து நடைபெறவும் ஆண்டவர் கிருபை செய்வார். இந்த ஆண்கள் தியானம் முகாமில் பல தளர்வுகள் வந்தாலும் தேவன் அவையெல்லாம் மாற்றிவிட்டு உற்சாகமாக நடத்திக் கொண்டு இருக்கின்றார். இந்த முகாமின் விளைவு என்னவென்றால் ஒரு கூட்ட ஆண்களை கர்த்தர் இரட்சித்து, அபிஷேகித்து, ஆசீர்வதித்து வெளி நாடுகளிலும், உள் நாடுகளிலும் வல்லமையாக பயன்படுத்தி வருகின்றார். இன்னும் இதிலும் பெரிதானவைகளை காணச் செய்யப் போகின்றார். பேதுரு, யோவான் போல ஒவ்வொருவரும் நம்மை உற்றுப்பார்த்து நம்மில் இருக்கின்ற இயேசுவை ஏற்றுக் கொள்ளட்டும். எழுப்புதலை நாம் காண்போம்.

## II அநேகரை எழுப்பிவிட்ட சமாரியா ஸ்திரீ : யோவான் 4:28-43

யோவான் 4:28-43 வரை உள்ள வசனங்களை வாசித்து பார்க்கும் போது சமாரியா ஸ்திரீ மூலமாக ஏற்பட்ட இன்னொரு எழுப்புதலை நாம் காணமுடியும். இந்த ஸ்திரீக்கு ஆரம்ப நாட்களில் இயேசு கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை கிடையாது. அதற்கு பதிலாக முற்பிதாக்கள் வழிபட்ட வழிமுறைகளை நம்பி வந்தார்கள். ஆனால் அந்த கிணற்று அருகே இயேசுவை சந்தித்த போது இயேசு கிறிஸ்துவின் போதனையைக் கேட்டு இயேசுவை தெய்வமாக ஏற்றுக்கொண்டார்கள். இவ்விதமாக தாம் இயேசு கிறிஸ்துவுக்குள் வந்ததை அடக்கி வைக்காமல் ஜாக்கிரதையாக வாழ ஆரம்பித்தாள். கர்த்தரிடத்தில் அவருடைய சீஷர்கள் வந்து சமாரியா ஸ்திரீக்கு ஏற்பட்ட மாற்றத்தை குறித்து ஆச்சரியப்பட்டார்கள். அப்போது அந்த ஸ்திரீ தன் குடத்தை வைத்து விட்டு ஊருக்குள்ளே போய் ஜனங்களை நோக்கி நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனிதன் எனக்குச் சொன்னார். அவரை வந்து பாருங்கள், அவர் கிறிஸ்து தானோ என்று கூறினாள். அப்போது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள். அது மாத்திரம் அல்ல, தான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார் என்று அந்த ஸ்திரீயின் வார்த்தையின் படி அந்த ஊரில் உள்ள சமாரியர்கள் அநேகர் அவர் மேல் விசுவாசம் உள்ளவர்கள் ஆனார்கள். இது ஒரு பெரிய எழுப்புதலாகும். இந்த எழுப்புதல் சமாரியா ஸ்திரீ மூலமாக நடைபெற்றது போல நம் ஒவ்வொருவருடைய மனந்திரும்புதல் மூலமாயும் நடைபெற வேண்டும். சமாரியர் இயேசுவிடம் வந்து தங்களிடத்தில் அவர் தங்க வேண்டும் என்று அவர்கள் வேண்டிக் கொண்டார்கள். அவர் இரண்டு நாட்கள் அங்கே தங்கினார் என்றெல்லாம் இந்த வேத பகுதியில் வாசிக்கின்றோம். ஒரு சமாரியா ஸ்திரீயின் ஜாக்கிரதையான வாழ்க்கை அந்த ஊரையே அசைத்தது.

அன்பானவர்களே, என்னைக் கொண்டு தேவனால் என்ன செய்ய முடியும் என்று இனிமேல் ஒருபோதும் அவிசுவாசப்படக்கூடாது. நம்மைக் கொண்டு தான் தேவன் எழுப்புதலை கட்டளையிடப் போகிறார். இனி மேலை நாட்டு மிஷனெரிகள் நம் பகுதியில் வந்து ஊழியம் செய்ய முடியாது. நாமே நம்முடைய பகுதிக்கு ஒரு காவலர்களாக செயல்பட தேவன் சித்தம் வைத்திருக்கின்றார். இனி அதிகமாக வேதம் வாசித்து ஜெபிக்க நாம் கடமைப் பட்டிருக்கின்றோம். கர்த்தர் நம்மை வல்லமையாக நடத்துவார். அதை எப்படி காண முடியும் என்றால், அன்றாடம் அவரின் வழி நடத்துதலை நாம் புரிந்து செயல்படுவதற்கு கர்த்தர் உதவி செய்வார். நம்மைப் போல ஒவ்வொருவருடைய ஜாக்கிரதையும் அநேகரை எழுப்பி விடப் போகின்றது. கர்த்தர் நம்மை உயர்த்துவார்.

## III அநேகரை எழுப்பிவிட்ட பெந்தெகொஸ்தே நாள் : அப். 2:1-4

அப். 2:1-4 வசனங்களை நாம் வாசித்து பார்க்கும் போது ஒரு பெந்தெகொஸ்தே நாளின் அனுபவத்தை நாம் காண முடியும். அந்த குறிப்பிட்ட நாளில் 120 பேர் கூடி ஒரு வீட்டின் மேலறையில் ஜெபிக்கத் தொடங்கினார்கள். பேதுரு இந்த ஊழியத்தை தலைமை தாங்கி நடத்தினார் அந்த நாளில் நடந்த அனுபவம் உலக அளவில் ஒரு எழுப்புதலை கொண்டு வந்தது. அப்போது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழுக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினியமமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த அவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள். இந்த உன்னதமான அனுபவத்தை சீஷர்கள் பெற்றுக் கொண்ட பிறகு சுவிசேஷ ஊழியம் தடையில்லாமல் நடைபெற்றது. இந்த அனுபவம் பெற்றவர்கள் எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் கர்த்தர் அவர்களை எழுப்புதலுக்கு பயன்படுத்துவார்.

1969ம் ஆண்டு தேவன் தம்முடைய திட்டத்தை எனக்கு வெளிப்படுத்தினார். அந்த திட்டங்களை செயல்படுத்துவதற்கு பெந்தெகொஸ்தே நாளின் அனுபவங்கள் கிடைத்த பிறகு பாரம்பரியமான பல காரியங்களை தேவன் என்னை விட்டு விலக்கினார். அபிஷேகம் எப்படி நடத்துமோ அப்படியே நடப்பதற்கு வேண்டிய கிருபையையும் கர்த்தர் தந்தார். எனக்கு மாத்திரம் அல்ல, என்னோடு ஜெபித்த அத்தனை பேருக்கும் இதே அனுபவத்தைக் கொடுத்து அதன் மூலமாய் குடும்பத்தை கட்டியெழுப்பி ஊழியத்தையும் செய்ய பெலன் தந்து வருகிறார். இன்னும் இதைவிட சிறப்பான முறையில் ஊழியம் செய்ய எங்களை ஆயத்தப்படுத்தியும், தேவன் என்னென்ன வாக்குத்தத்தம் கொடுத்தாரோ அதன்படியே நடத்தியும் வருகின்றார். இந்த கடைசி நாட்களில் யாரெல்லாம் இரட்சிக்கப்பட்டு அபிஷேகம் பெற்று ஜாக்கிரதையுடன் வாழ்கின்றோமோ அவர்கள் அத்தனை பேரும் எழுப்புதல் ஊழியத்திற்கு தகுதியுடையவர்களாக தேவன் ஆயத்தம் செய்து வருகின்றார். இயேசுவின் வருகைக்கு முன்பாக அநேக ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கு ஜாக்கிரதையாய் தன்னை காத்துக்கொள்பவர்கள் தேவனுக்குத் தேவை இன்னும் சுருக்கமாக சொன்னால் நீங்கள் ஒவ்வொருவரும் எழுப்புதல் பணிக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். கர்த்தர் அனைத்து காரியங்களையும் பார்த்துக் கொள்வார். இன்னும் அதிகமாக தேவனோடு பேசுவோம். நம்முடைய ஜாக்கிரதையான வாழ்க்கை அநேகரை எழுப்பட்டும். ஆமென்.

சகோ. **P.D.ஞானப்பிரகாசம்,** சுரண்டை.

ஜெப எண் - 268 **ஜெப நாள்: 05-03-2024 செவ்வாய்** காலை 6.00 To மாலை 6.00 வரை.

## 12 மணி நேர உபவாச சங்கிலித் தொடர் ஜெபமும், மாதம் முழுவதும் ஜெபிக்க வேண்டிய ஜெப விண்ணப்பங்களும்

### 1. மார்ச் மாதத்தின் ஆசீர்வாதங்களுக்காக :

1. ஏசாயா 55:6 கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள். சரியான நேரத்தில் தேவனைத் தேடவும், அதனால் வரும் ஆசீர்வாதங்கள் நமக்கும் நம் குடும்பத்திற்கும் இன்னும் அதிகமாய் கிடைக்கவும் ஜெபிப்போம்.
2. யோசுவா 3:5 யோசுவா ஜனங்களை நோக்கி, உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள். நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார் என்றான். இந்த வசனத்தின்படி நாம் பரிசுத்தமடைந்து, அற்புதங்களைக் காண ஜெபிப்போம்.
3. யாத்திராகமம் 35:30 கர்த்தர் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலேயேலைப் பேர் சொல்லி அழைத்து.... உங்களையும் தேவன் பேர் சொல்லி அழைத்துள்ளார். தேவனுக்கு உங்களை ஒப்புக் கொடுத்து ஜெபிப்போம்.
4. யோனா 1:2 நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி.. யோனாவைப் போல, நீங்களும் கர்த்தரின் வார்த்தையை அநேகருக்கு சொல்ல அழைக்கப்பட்டீர்கள். இதற்காக ஜெபிப்போம்.
5. மத்தேயு 6:34 ஆகையால் நாளைக்காக கவலைப்படாதிருங்கள். உங்களின் வருத்தங்களையும், உங்கள் பிள்ளைகளுக்கான வருத்தத்தையும் இயேசுவிடம் கூறி விசுவாசமாய் இருக்கவும், உங்களுக்கு அற்புதம் இம்மாதம் நடைபெறவும் ஜெபிப்போம்.
6. லூக்கா 24:49 நீங்களோ, உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும், எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இம்மாதம் கிடைக்கவும், உங்கள மூலம் மற்றவர்களும் அபிஷேகம் பெற்றுக் கொள்ளவும் ஜெபிப்போம்.
7. ரோமர் 1:10 நீங்கள் ஸ்திரப்படுவதற்காக ஆவிக்குரிய சில வரங்களை உங்களுக்கு கொடுக்கும்படிக்கும்... நமக்கு தேவன் வைத்திருக்கும் சிறப்பான வரங்கள் சரியான வேளையில் நமக்கு கிடைக்க, அதன்மீது தாகத்தோடு போராடி ஜெபிப்போம்.

### 2. இந்தியாவில் நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்காக:

1. மாற்கு 7:37 எல்லாவற்றையும் நன்றாய் செய்தார் தேர்தல் சரியாக அந்தந்த தேதிகளில் குறிக்கப்பட்டப்படி நடைபெறவும், எந்த விதமான தடைகளும் வராமல் தேவன் காத்துக் கொள்ளவும், தேர்தல் அதிகாரிகளுக்காக ஜெபிப்போம்.
2. அப்.1:26 சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது. தேவன் கிரியை செய்து, தமக்குச் சித்தமானவர்களை தேவனே தெரிந்தெடுக்கவும், இதனால் அநேக குழப்பங்கள் மாறவும், தேர்தல் நாள்களில் அமைதி காணப்படவும் ஜெபிப்போம்.
3. I கொரிந்தியர் 9:16 சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை. அது என்மேல் விழுந்த கடமையாய் இருக்கிறது. சுவிசேஷ ஊழியத்திற்கு அனுகூலமான சூழ்நிலை தேர்தலுக்குப் பின் உண்டாக ஜெபிப்போம்.
4. எபேசியர் 6:11 நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி.... சாத்தானின் கிரியைகளை முறியடிக்கும் விசுவாசம் தேசத்தின் விசுவாசிகளுக்கும், ஊழியர்களுக்கும் இன்னும் உண்டாக ஜெபிப்போம்.
5. I இராஜாக்கள் 18:36 கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும். இந்த வசனத்தின்படி, நம் தேசமே தேவனின் மகிமையைக் கண்டு இயேசுவைப் பின்பற்றும்படி தேர்தல் முடிவுகள் வெளி வர ஜெபிப்போம்.
6. எஸ்தர் 4:14 நீ இந்தக் காலத்திலே மவுனமாய் இருந்தால், யூதருக்குச் சகாயமும், இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும். தேசத்தில் இரட்சிக்கப்பட்டவர்கள், வைராக்கியம் கொண்டு தேர்தலுக்காக அதிகம் ஜெபிக்கும் ஜெப ஆவியை பெற்றுக் கொள்ள ஜெபிப்போம்.
7. யோபு 42:12 கர்த்தர் யோபுவின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார். தேர்தலுக்கு பின்பு இந்தியாவின் பின்னிலையை அதிகமாய் ஆசீர்வதிக்கப்படவும், தேவ நாமம் மட்டும் மகிமைப்படவும் ஜெபிப்போம்.

### 3. பொதுவான தேவையுள்ளவர்களின் தேவைகள் சந்திக்கப்பட:

1. ஆதியாகமம் 26:12 ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான். கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால், அந்த வருஷத்தில் நூறு மடங்கு பலனடைந்தான். இப்படியாக கர்த்தர் நம் தேசத்தில் தமது ஆசீர்வாதக் கரத்தை நீட்டி ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.
2. II இராஜாக்கள் 5:1 அவனைக் (நாகமான்) கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார். நம் தேசம் முழுவதும் இரட்சிப்பு உண்டாக, தேவன் தமக்கு சித்தமானவர்களை விரைவில் எழுப்பவும் ஜெபிப்போம்.
3. II நாளாகமம் 7:15 இந்த ஸ்தலத்தில் செய்யப்படும்

ஜெபத்திற்கு என் கண்கள் திறந்தவைகளும் என் செவிகள் கவனிக்கிறவைகளுமாய் இருக்கும். நம் தேசத்தில் உள்ள அனைத்து மிஷனெரி ஸ்தாபனங்களும் இன்னும் ஜெபிக்கவும், அந்த ஜெபம் அற்புதங்களைக்கொண்டுவர ஜெபிப்போம்.

4. I யோவான் 2:25 நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம். இயேசுவின் வருகைக்கு நம் தேசம் ஆயத்தப்படவும், இன்னும் சுவிசேஷம் எல்லா இடங்களிலும் அறிவிக்கப்படவும், ஊழியர்கள் இன்னும் எழும்பவும் ஜெபிப்போம்.

5. ஏசாயா 54:17 உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம். நம் தேசத்திற்கு விரோதமாக எழும்பும் பக்கத்து நாடுகளின் எதிர்ப்புகள் வாய்க்காமல் போகவும், தேவ பாதுகாப்பு தேசத்தில் எப்போதும் காணப்படவும் ஜெபிப்போம்.

6. யோவேல் 2:28 அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். நம் தேசத்தில் உள்ள அனைத்து நபர்கள் மேலும் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டு ஆவியின் பெலன் யாவருக்கும் கிடைக்க ஜெபிப்போம்.

7. யாத்திராகமம் 15:26 நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார். நம் தேசத்தின் தலைவர்கள் அனைவருக்கும் கர்த்தரே பரிகாரியாய் இருந்து, தேசத்தில் உள்ள அனைத்து குடும்பங்களையும் ஆசீர்வதிக்கவும் ஜெபிப்போம்.

## 4. எழுப்புதல் ஜெப ஐக்கியத்தில் தேவ நடத்துதல் காணப்பட:

1. எண்ணாகமம் 23:19 பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல. மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல. நம் ஐக்கியத்திற்கு தேவன் சொன்ன வாக்குத்தத்தம் யாவும் யாவருக்கும் சீக்கிரம் நிறைவேற ஜெபிப்போம்.

2. ஏசாயா 41:10 நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன். ஐக்கியத்தை பயமுறுத்தும் பிரச்சனைகள் யாவையும் தேவன் முறியடிக்கவும், எல்லாப் பிரச்சனையும் தேவனால் தீர்க்கப்படவும் ஜெபிப்போம்.

3. சங்கீதம் 133:1 இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது. ஐக்கிய கூடுகைகளில் இவ்வசனத்தின் ஆசீர்வாதம் தங்கியிருக்கவும், அநேகர் ஐக்கியத்தில் சேரவும் ஜெபிப்போம்.

4. நாகூம் 1:7 கர்த்தர் நல்லவர். இக்கட்டு நாளிலே அரணான கோட்டை. தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார். ஐக்கியத்தில் இணைந்துள்ள அனைவருக்கும் கர்த்தர் நல்லவராய் இருக்கவும், அவர்களின் இக்கட்டுகள் மாறவும் ஜெபிப்போம்.

5. லூக்கா 13:12 இயேசு அவளைக் கண்டு, தம்மிடத்தில் அழைத்து, ஸ்திரீயே உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய் என்று சொல்லி.. ஐக்கியத்திலும் சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் அனைவரும் பெலனடைய ஜெபிப்போம்.

6. பிலிப்பியர் 2:13 ஏனெனில், தேவனே, தம்முடைய சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராய் இருக்கிறார். தேவ சித்தம் செய்வோர் ஐக்கியத்தில் நிறைந்து காணப்பட ஜெபிப்போம்.

## 5. அனைவரின் குடும்பங்களிலும் எழுப்புதல் உண்டாக :

1. வெளி.3:20 இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். அனைத்து குடும்பங்களும் இரட்சிக்கப்பட்டு, அபிஷேகம் பெறவும், இயேசுவின் அழைப்பிற்குக் கீழ்ப்படியவும், தருணத்தை நன்றாகப் பயன்படுத்தவும் ஜெபிப்போம்.

2. எபிரெயர் 10:30 பழிவாங்குதல் எனக்குரியது. நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். குடும்பங்களில் பழிவாங்கும் சூழ்நிலையை கர்த்தர் மாற்றிப்போடவும், அன்பு ஒன்றே குடும்பத்தில் காணப்பட ஜெபிப்போம்.

3. அப்.10:2 அவன் (கொர்நேலியு) பக்தியுள்ளவனும் தன் வீட்டார் அனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து.... தேவனை நோக்கி ஜெபம் பணணிக் கொண்டிருந்தான். இதைபோல அனைத்து குடும்பங்களும் மாற ஜெபிப்போம்.

4. யோவான் 1:2 இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கல்யாணத்துக்கு அழைக்கப் பட்டிருந்தார்கள். அனைத்துக் குடும்பங்களிலும் நற்காரியங்கள் நடைபெறவும், இயேசு அந்தந்த வீடுகளுக்கு அழைக்கப்படவும், ஆசீர்வாதம் உண்டாகவும் ஜெபிப்போம்.

5. லூக்கா 6:48 நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும் அசைக்கக் கூடாமற் போயிற்று. அனைத்து வீடுகளும் நேர்த்தியாய் கட்டப்படவும், மேலும் அக்குடும்பத்திலுள்ள ஆவிக்குரிய நிலையும் உறுதியாய் இருக்கவும் ஜெபிப்போம்.

6. ஆதி. 49:22 யோசேப்பு கனிதரும் செடி. எல்லா குடும்பத்தாரும் யோசேப்பு போல கனிதரும் செடியாய் மாறவும், அக்குடும்பங்கள் முன்மாதிரியாய் இருக்கவும், இதற்கு மாறாக உள்ள சூழ்நிலை சீக்கிரம் நீங்கவும், தேவன் கிரியை செய்யவும் ஜெபிப்போம்.

7. யாத் 15:1 அப்பொழுது மோசேயும், இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரைப் புகழ்ந்து பாடியப் பாட்டு.. அனைத்துக் குடும்பத்திலும் பாட்டு, ஜெபம், ஆவியின் நிறைவு உண்டாகவும், குடும்பங்கள் அபிஷேகத்தினால் நிரம்பி, அவர்கள் மூலம் எழுப்புதல் உண்டாகவும் ஜெபிப்போம்.

மார்ச் 2024

## தினமும் வேதத்தின் மகத்துவங்களைத் தியானித்து, ஜெபியுங்கள்.

01.03.24 வெள்ளி : I இராஜாக்கள் 3:12 உன் வார்த்தைகளின்படி செய்தேன்; ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன். சாலொமோன் ராஜாவுடைய வேண்டுதல் நிறைவேறினது போல நாம் வேண்டிக்கொள்ளும் அத்தனை வேண்டுதலும் நிச்சயமாய் நிறைவேறும். இந்த வேண்டுதலாகிய ஜெபத்தை ஒரு போதும் விட்டுவிடக்கூடாது. இதுவரை இல்லாத விசேஷித்த பதில்கள் தேவனிடம் உண்டு. அவைகள் நமக்காகவே தேவனிடம் இருக்கின்றது. அவைகள் நமக்கு நிச்சயம் நிறைவேறும்.

02.03.24 சனி : II இராஜாக்கள் 4:44 அப்பொழுது அவர்களுக்கு முன்பாக அதை வைத்தான்; கர்த்தருடைய வார்த்தையின்படியே அவர்கள் சாப்பிட்டதுமன்றி மீதியும் இருந்தது. எலிசா செய்தது போல நாமும் நமக்குரியவைகளை பிறருக்கு கொடுத்து ஊழியம் செய்வோமானால் எல்லாரும் சாப்பிட்டது போக மீதம் எடுக்கவும் கர்த்தர் உதவி செய்வார். கொடுக்கும் சுபாவம் இன்னும் அதிகமாக நம் அனைவருக்கும் தேவை. நாம் இவ்விதமாக நடந்து கொள்ளும் மனப்பக்குவத்தை தேவன் நமக்குத் தந்தருளுவார்.

03.03.24 ஞாயிறு : I நாளாகமம் 22:19 இப்போதும் நீங்கள் உங்கள் இருதயத்தையும், உங்கள் ஆத்துமத்தையும், உங்கள் தேவனாகிய கர்த்தரைத் தேடுகிறதற்கு நேராக்கி.... தாவீது தன்னுடைய இருதயத்தை கர்த்தருக்கு நேராக்கினது போல நாம் நம்முடைய இருதயத்தையும் கர்த்தருக்கு நேராக்கும்போது கர்த்தர் இன்னும் நமக்குச் சிறப்பான வழிநடத்துதலை தந்து நம்மை உயர்த்துவார். இதனால் நம்முடைய குடும்பமும் செழிப்படையும். நாம் செய்து கொண்டிருக்கின்ற ஊழியமும் வசனத்தின்படி வளர்ச்சி அடையும்.

04.03.24 திங்கள் : II நாளாகமம் 7:15 இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு, என் கண்கள் திறந்தவைகளும், என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும். ஆலயத்தில் போய் ஜெபிப்பது சாலொமோன் ராஜாவுக்கு பிரியமாய் இருந்ததுபோல நாம் எங்கெல்லாம் ஜெபிக்கிறோமோ அந்த இடத்தில் இப்படிப்பட்ட முறையில் தேவன் நமக்கு பதில் கொடுத்து வழிநடத்துவார் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். அப்போது அவிசுவாசம் நம்மை மேற்கொள்ளாதபடிக்கு தேவன் கிருபை செய்வார்.

05.03.24 செவ்வாய் : எஸ்றா 1:1 ஏரேமியாவின் வாயினாலே கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும்படி, கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவினதினாலே.. கர்த்தடைய வசனம் இருக்கும் இடத்தில் கர்த்தருடைய ஆவியும் இருக்கும். நம்முடைய வேத தியானத்தின் அடிப்படையில் தேவன் தம்முடைய ஆவியை நம் மேல் வைக்கின்றார். இந்த அனுபவம் கோரேசின் ராஜாவுக்கு இருந்தது. இந்தக் கடைசி காலத்தில் கர்த்தருடைய அபிஷேகம் இன்னும் அளவில்லாமல் நம் மேல் ஊற்றப்பட வாஞ்சையாய் இருப்போம்.

06.03.24 புதன் : நெகேமியா 2:20 அதற்கு நான் மறுமொழியாக: பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்குக் காரியத்தைக் கைகூடிவரப்பண்ணுவார். மிகப்பெரிய போராட்டத்தை சந்தித்த நெகேமியா கர்த்தருடைய வார்த்தையை மறுமொழியாக வைத்திருந்தார். இதைபோல நமக்கு ஒரு சூழ்நிலை வரும்போது நெகேமியா போல மறுமொழியான வார்த்தையைப் பேச நாம் எப்போதும் ஜெபத்துடன் ஆயத்தமாய் இருக்க வேண்டும். இந்த மறுமொழியான தேவவார்த்தை நமக்கும், நம்மை சார்ந்தவர்களுக்கும் ஒரு விடுதலையை கொண்டு வரும்.

07.03.24 வியாழன் : எஸ்தர் 8:16 இவ்விதமாய் யூதருக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், களிப்பும், கனமும் உண்டாயிற்று. எஸ்தர் நாட்களிலே யூதருக்கு ஏற்பட்ட விடுதலையை நமக்குத் தர தேவன் ஆயத்தமாயிருக்கிறார். நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் நம்முடைய ஜனங்களுக்காக எஸ்தரைப் போல இன்னும் அதிக வைராக்கியமாக நம்முடைய கடமைகளை செய்ய வேண்டும். எஸ்தரை மேன்மைப்படுத்தின தேவன் ஏற்ற காலத்தில் நம்மையும் மேன்மைப்படுத்துவார். பொறுமையுடன் தேவ பதிலை பெற்று கொள்ளுவோம்.

08.03.24 வெள்ளி : யோபு 1:5 விருந்துசெய்கிற அவரவருடைய நாள்முறை முடிகிறபோது, யோபு: ஒருவேளை என் குமாரர் பாவஞ்செய்து, தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி, அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி... யோபு தன் பிள்ளைகளை பரிசுத்தப்படுத்தி ஆசீர்வாதத்திற்குள் வழிநடத்தினது போல நம்முடைய குடும்பத்தின் பிள்ளைகளை இவ்விதமாய் வழி நடத்த வேண்டியது பெற்றோரின் கடமையாகும். இவ்விதமாய் செய்யாவிட்டால் இனிமேல் இவ்விதம் செய்யப் பழகிக்கொள்வோம்.

09.03.24 சனி : சங்கீதம் 4:3 பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காக தெரிந்துகொண்டாரென்று அறியுங்கள். தேவன் நமக்குத் தந்த பக்தியுள்ள வாழ்க்கையை நாம் கர்த்தருக்காக அர்ப்பணித்து வாழ வேண்டும். அனுதினமும் நாம் சந்திக்கிற சோதனையில் கர்த்தருக்கு பிரியமாய் நடக்கிறோமா என்று நம்மை நிதானித்துப் பார்க்க வேண்டும். முற்பிதாக்கள் இவ்வாறு செய்தபடியினால் கர்த்தர் அவரை ஆசீர்வதித்தார். நாமும் இன்னும் பக்தியுள்ள மார்க்கத்தாரை போல நடந்துக்கொண்டு அநேகரை விசுவாசத்திற்குள் நடத்த வேண்டும்.

10.03.24 ஞாயிறு : நீதிமொழிகள் 30:8 மாயையையும், பொய்வசனிப்பையும் எனக்குத் தூரப்படுத்தும்; தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக. வேதத்தை வாசித்துப் பார்க்கும் போது அநேக ஜெபக்குறிப்புகளை நாம் காணலாம். அதில் ஒன்று இந்த வசனமாகும். இதன்படி நாம் ஜெபிக்கும் போது சரியான ஆசீர்வாதங்களை மட்டும் நாம் பெற்று அனுபவிக்க கர்த்தர் உதவி செய்வார். வேதத்தில் ஜெபித்தவர்கள் யாவரும் சரியான ஆசீர்வாதம் பெற்றார்கள். யாபேஸ் இதற்கு சாட்சியாகும்.

11.03.24 திங்கள் : பிரசங்கி 7:29 இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார்; அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத் தேடிக் கொண்டார்கள். ஏதேன் தோட்டத்தில் வாழ்ந்த ஆதாம், ஏவாள் செம்மையானவர்களாக இருந்தாலும், தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் போனதினால் அநேக உபாயதந்திரங்களை சாக்குப்போக்காக சொன்னார்கள். ஆனாலும் அவர்களால் ஏதேன் தோட்டத்தில் நிலைத்திருக்க முடியவில்லை. நாமும் இந்த விஷயங்களில் கவனமுடையவர்களாக இருக்க வேண்டும்.

12.03.24 செவ்வாய் : உன்னதப்பாட்டு 8:14 என் நேசரே! தீவிரியும். ஆண்டவர் ஏற்ற சமயத்தில் நம்மை ஆசீர்வதிப்பார். அந்த ஆசீர்வாதம் தீவிரமாக நம் மேல் பலிக்கும். அதுவரை பொறுமையாக இருந்து பூரண ஆசீர்வாதத்தைப் பெற்று கொள்ள வேண்டும். இஸ்ரவேல் ஜனங்கள் பல ஆண்டுகள் பொறுமையாய் காத்திருந்து எகிப்து தேசத்திலிருந்து தீவிரமாய் கானானுக்குள் பிரவேசித்தார்கள். தேவன் என்னை ஆசீர்வதிக்கவில்லையே என்று நாம் நினையாமல் விசுவாசத்துடன் காத்திருப்போம்.

13.03.24 புதன் : ஏசாயா 6:8 பின்பு: யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான் இதோ அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன். இப்படிப்பட்ட அர்ப்பணிப்பு உள்ளவர்களாக நாம் மாற வேண்டும். ஏசாயாவை வழிநடத்தின தேவன் நம் அனைவரையும் அவர் சித்தப்படி வழிநடத்துவார். ஏசாயாவிற்கு கொடுத்த கிருபை வரங்களும், ஆசீர்வாதங்களும் நம் மேல் வந்து நமக்கு பலிக்கும். தொடர்ந்து ஜெபிப்போம்.

14.03.24 வியாழன் : எரேமியா 52:2 யோயாக்கீம் செய்தபடியெல்லாம் அவனும் கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். இந்த வசனத்தின்படி நடந்தால் தேவனுடைய தண்டனை கிடைக்கும். அப்படி சூழ்நிலை வராமல் இருக்க அனுதினமும் வேத தியானம் செய்து ஜெபிக்க வேண்டும். இவ்விதமாக நாம் நடந்து கொண்டால் வேதத்தில் அநேக சத்தியங்களை நாம் அறிந்துக் கொள்ள முடியும். சத்தியங்களை அறிந்துக் கொள்ளும் போது கர்த்தர் நம்மை விடுவிப்பார். அப்போது பொல்லாத காரியங்கள் நமக்கு வராது.

15.03.24 வெள்ளி : புலம்பல் 3:44 ஜெபம் உட்பிரவேசிக்கக்கூடாதபடிக்கு உம்மை மேகத்தால் மூடிக்கொண்டீர். நம்முடைய தேவன் ஜெபத்தைக் கேட்கிறவராக இருந்தாலும், சில சமயங்களில் நமக்கு உரிய பதிலை தராமல் தேவன் தன்னை மறைக்கிறார். சவுல் ராஜா சரியான ஜெபம் பண்ணாதபடியினால் அவரால் ஜெபிக்கவும் முடியவில்லை. அவரின் முடிவும் பயங்காரமாக மாறிவிட்டது. இவைகளெல்லாம் நமக்கு வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. நம்முடைய ஜெபம் பரலோகத்தின் பலகணிகளைத் திறக்கக் கூடியதாய் இருக்கிறது.

16.03.24 சனி : எசேக்கியேல் 37:10 எனக்குக் கற்பிக்கப்பட்டபடி நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்; அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து காலூன்றி மகா பெரிய சேனையாய் நின்றார்கள். இந்த வசனத்தின்படி ஒரு எழுப்புதல் சீக்கிரமாக உலகத்தில் வர வேண்டும். அப்போது தான் மனிதர்களுக்குள் மெய்யான மனந்திரும்புதல் உண்டாகும். இந்த எழுப்புதல் பணிக்கு தேவன் உங்கள் அனைவரையும் அழைத்துள்ளார். தாமதம் செய்யாமல் இன்னும் நம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுப்போம்.

17.03.24 ஞாயிறு : தானியேல் 1:12 பத்துநாள் வரைக்கும் உமது அடியாரைச் சோதித்துப்பாரும்; எங்களுக்குப் புசிக்க பருப்பு முதலான மரக்கறிகளையும், குடிக்கத் தண்ணீரையும் கொடுத்து... தனக்கு ஏற்பட்ட சோதனையில் தானியேலும், அவனது தோழர்களும் நிலைத்து நின்று ஜெயம் பெற்றது போல நமக்கு வரும்

அனைத்துச் சோதனைகளிலும் நாம் நிலைநிற்க கர்த்தர் நமக்கு உதவி செய்வார். அப்போது தானியேல் தேசத்தில் உயர்த்தப்பட்டதைப் போல, உரிய கனம் நமக்கும் கிடைக்க கர்த்தர் துணை நிற்பார்.

18.03.24 திங்கள் : ஓசியா 4:1 இஸ்ரவேல் புத்திரரே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்; தேசத்துக் குடிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது. தேசத்து குடிகளோடு கர்த்தருக்கு இருக்கின்ற வழக்குகளை நாம் வேத தியானத்தின் மூலம் அறிந்து கொள்ள முடியும். ஜனங்களை அழிப்பேன் என்று சொன்ன ஆண்டவர் மோசேயின் ஜெபத்தைக் கேட்டு ஜனங்களை அழியாமல் பாதுகாத்தார். மோசே அதிகமாய் ஜெபித்ததினால் இஸ்ரவேல் ஜனங்களுக்கு இருந்த வழக்கு மோசேயின் ஜெபத்தின் மூலம் மாறியது.

19.03.24 செவ்வாய் : யோவேல் 1:14 பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள்; விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள்; மூப்பரையும் தேசத்தின் எல்லாக் குடிகளையும், உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே கூடிவரச்செய்து கர்த்தரை நோக்கி கூப்பிடுங்கள். இவ்வாறு எஸ்தர் கூப்பிட்டு ஜெயம் பெற்றது போல இன்னும் அநேக இடங்களில் உபவாச ஜெபங்கள் தொடங்க வேண்டும். அப்போது சகல விதமான ஜாதிப்பிசாசுகளும் செயல்படாமல் அழிக்கப்படும். அந்த பாரம் அனைவருக்கும் உண்டாக ஜெபிப்போம்.

20.03.24 புதன் : ஆமோஸ் 5:6 கர்த்தரைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; இல்லாவிட்டால் பெத்தேலில் இருக்கிற ஒருவராலும் அவிக்கப்படாத அக்கினி யோசேப்பின் வீட்டில் பற்றி, அதைப் பட்சிக்கும். கர்த்தரை தேடாதவர்களுக்கு தேவ தண்டனையும், சீக்கிரமாக வரயிருக்கிறபடியால், குடும்பம் குடும்பமாக தேசத்தில் கர்த்தரை தேடுகிறவர்களை கர்த்தரே எழுப்பும்படியாக நாமும் கருத்துடன் ஜெபிக்க வேண்டும். தேவன் இரங்கி சாபங்கள் யாவையும் ஆசீர்வாதமாக மாற்றுவார்.

21.03.24 வியாழன் : ஒபதியா 1:4 நீ கழுகைப்போல உயரப்போனாலும், நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன் வீட்டைக் கட்டினாலும், அவ்விடத்திலிருந்தும் உன்னை விழத்தள்ளுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். பெருமை உள்ளவர்கள், இப்படிப்பட்ட எண்ணமுடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களை தாழ்த்தினால் தேவ கோபாக்கினைக்கு தப்ப முடியும். இப்படிப்பட்ட வசனங்களை அவர்கள் பார்த்து தங்களை தாழ்மையாக நடப்பதற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். சில ராஜாக்கள் இவ்விதம் நடந்து தாழ்த்தப்பட்டார்கள்.

22.03.24 வெள்ளி : யோனா 4:11 வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருக ஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிப்பேனோ என்றார். நம் தேவன் இன்றைக்கும் நம் தேசத்தின் மேல் பாரமாய் இருக்கின்றார். அந்த நாளில் யோனா எழும்பினதுபோல இந்த நாட்களிலும் கர்த்தர் நம்மை எழுப்பப் போகிறார். தேவனின் பூரணசித்தம் நிறைவேற ஆத்துமாக்களை ஆதாயம் செய்வோம்.

23.03.24 சனி : மீகா 4:12 ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய நினைவுகளை அறியாமலும், அவருடைய யோசனையை உணராமலும் இருக்கிறார்கள். நமக்கு விரோதமாக எழும்புகிறவர்களுக்கு முன் கர்த்தர் நம்மை உயர்த்துவார். நம்முடைய எதிராளிகள் செயலற்றுப் போவார்கள். யோசேப்புடைய சகோதரர்கள் அவருக்கு தீமை செய்ய நினைத்தாலும் அது நடக்காதபடி தேவன் பாதுகாத்ததை நாம் அறிவோம். கர்த்தர் நமக்கு நியமித்த ஆசீர்வாதங்களை ஒன்றுகூட தடையில்லாமல் அதனதன் காலத்தில் நேர்த்தியாய் நடத்துவார்.

24.03.24 ஞாயிறு : நாகூம் 1:12 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: உன்னை நான் சிறுமைப் படுத்தினேன், இனி உன்னைச் சிறுமைப்படுத்தாதிருப்பேன். நாம் கடந்து வந்த பாதைகளில் காணப்பட்ட வருத்தங்களை இனி காணாதபடி கர்த்தர் நம்மை காக்க வல்லவராயிருக்கிறார். எஸ்தர் தான் கண்ட சிறுமையை திரும்பக் காணாதபடி கர்த்தர் காத்துக் கொண்டதுபோல, நம் அனைவருக்கும் கர்த்தர் பாதுகாப்பை கொடுக்கின்றார். இனி நாம் சிறுமைப்பட்டு போகாதபடி, நம் பிள்ளைகளையும் கர்த்தர் உயர்த்துவார்

25.03.24 திங்கள் : ஆபகூக் 1:2 கர்த்தாவே, நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் கேளாமலிருக்கிறீரே! கொடுமையினிமித்தம் நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் இரட்சியாமலிருக்கிறீரே. யோபு பொறுமையாய் காத்திருந்து பூரண ஆசீர்வாதம் பெற்றது போல கர்த்தரை தேடுகிற அனைவருக்கும் கர்த்தரே பூரண ஆசீர்வாதங்களை கொடுக்கப்போகின்றார். என் ஜெபத்திற்கு இன்னும் பதில் இல்லையே என்று நாம் சோர்ந்து போய் விடக்கூடாது.

26.03.24 செவ்வாய் : செப்பனியா 1:14 கர்த்தருடைய பெரியநாள் சமீபித்திருக்கிறது; அது கிட்டிசேர்ந்து மிகவும் தீவிரித்துவருகிறது; கர்த்தருடைய நாளென்கிற சத்தத்துக்குப் பராக்கிரமசாலி முதலாய் அங்கே மனங்கசந்து

அலறுவான். மணவாளனை சந்திக்க இருந்த கன்னிகைகளில் ஐந்து பேர் புத்தியற்றவர்களாக இருந்தார்கள். அவர்கள் மனங்கசந்து அழுதும் பலனைக் காணாமல் போனார்கள். இயேசுவின் வருகை சமீபமாய் இருக்கிறது. நாம் அனைவரும் சந்திப்பதற்கு ஆயத்தப்படுவது மட்டுமல்ல, காவலாளிகளாகவும் இருப்போம்.

27.03.24 புதன் : ஆகாய் 2:9 முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும், இந்த பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். நம்முடைய ஊழியமும், நம்முடைய பிள்ளைகளும இனிமேல் எப்படி இருப்பார்கள் என்று கேட்பவர்களுக்கு நாம் சொல்ல வேண்டிய பதில் என்னவென்றால் முந்தின ஊழியத்தின் மகிமையைப் பார்க்கிலும், இந்தப் பிந்தின ஊழியத்தின் மகிமை பெரிதாயிருக்கும் என்று பதில் சொல்ல வேண்டும். அப்படிச்சொல்லும் போது கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

28.03.24 வியாழன் : சகரியா 2:10 சீயோன் குமாரத்தியே, கெம்பீரித்துப்பாடு; இதோ, நான் வந்து உன் நடுவில் வாசம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த வசனத்தின்படி தாவீது ராஜா ஆவியினால் நிறைந்து கர்த்தரை துதித்ததால் அவருக்கு எதிராய் இருந்தவர்கள் யாவரும் வெட்கப்பட்டு போகும்படி கர்த்தர் கிரியை செய்தார். நாம் அனைவரும் இந்த கடைசிக்காலத்தில் ஆவியானவர் விரும்புகிறபடி கர்த்தருக்கு ஆராதனை செய்ய வேண்டும். அப்போது தேவன் நம் நடுவில் இருந்து அற்புதங்களை செய்வார்

29.03.24 வெள்ளி : மல்கியா 3:18 அப்பொழுது நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள். ஆண்டவர் விசுவாசிகளுக்கும், ஊழியர்களுக்கும் இருக்கிற வித்தியாசத்தை சீக்கிரமாக காணச் செய்யப் போகிறார். அவர் நம்மைக் குறித்தும் நற்சாட்சி கூற வேண்டுமானால் நாம் தேவனுக்கு பிரியமானதை செய்ய வேண்டும். எலியா, எலிசா இவர்களின் ஊழியங்கள் தேவனுக்கு விசேஷமாக தெரிந்தது.

30.03.24 சனி : மத்தேயு 7:1 நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். சீஷர்கள் அடிக்கடி மற்றவர்களை குற்றவாளிகளென்று தீர்த்தப்படியால் அவர்கள் ஊழியப் பாதையில் சரியான முன்னேற்றத்தை காணமுடியாமல் போய் விட்டது. அதுபோல நாம் யாராக இருந்தாலும் மற்றவர்களை குற்றவாளிகளென்று தீர்க்காதபடிக்கு இன்னும் ஜாக்கிரதையாக வாழ வேண்டும். அப்போது கர்த்தர் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை ஆசீர்வதிப்பார்.

31.03.24 ஞாயிறு : மாற்கு 16:20 அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூட கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். அப்போஸ்தலர்கள் ஊழியம் செய்யும் போது ஆவியானவர் கூடயிருந்து கிரியை செய்தார். அதுபோல கர்த்தர் நாம் செய்யும் ஊழியங்களில் நம்மோடு கூடயிருந்து இன்னும் அதிகமாக கிரியை செய்வார். இந்த எழுப்புதல் உண்டாக இன்னும் கர்த்தருக்கு காத்திருந்து ஜெபிக்கத் தொடங்குவோம்.

## ஊழியப் பகிர்மானம் - 34வது குடும்பத் தியான முகாம்

தேவனின் பெரிதான கிருபையால், 2024ம் ஆண்டு ஜனவரி 15,16,17 ஆகிய தேதிகளில் நமது ஐக்கிய 34வது குடும்பத்தியான முகாம் ஆசீர்வாதமாக நடைபெற்றது. முகாம் ஆசீர்வாதமாக நடைபெற முன் கூட்டியே யாவரும் கூடியும், தனித்தும் ஜெபித்தது, முகாம் ஆசீர்வதிக்கப்பட ஒரு காரணமாய் இருந்தது. நமது ஜெப ஐக்கிய ஜெபக்கூடாரத்தில் வைத்து முகாம் நடைபெற்றது. அழைக்கப்பட்ட ஊழியர்களாகிய நமது அண்ணன் சகோ. T.சாம் அற்புதராஜ் அவர்களும் மற்றும் சகோதரி சகுந்தலா, சகோதரி எப்சி அவர்களும், நம் ஐக்கிய ஊழியர்கள் யாவரும் இணைந்து தேவ வார்த்தையை ஜெபத்துடன் பகிர்ந்து கொண்டனர். எல்லா செய்தியும், குடும்பங்களைக் கட்டவும், விசுவாசப் பாதையில் முன்னேறிச் செல்லவும் ஆசீர்வாதமாய் இருந்தது. கர்த்தர் ஐக்கிய ஊழியர்களைக் கொண்டு பாடல்கள், சாட்சிப் பகுதிகளை நடத்தினார். கடந்த ஆண்டு போல இந்த வருடமும் அநேக ஆத்துமாக்களை தேவன் கொண்டு வந்தார். முகாம் முடிந்தாலும் பெற்றுக் கொண்ட தேவ ஆசீர்வாதம் யாவருக்கும் கிடைத்துக் கொண்டு இருக்கின்றது. முகாம் ஆசீர்வாதமாய் இருக்க ஜெபித்த, உழைத்த, கொடுத்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம். முகாமிற்கு எதிராக ஆயுதங்கள் வாய்க்காமல் போனது. ஆவியானவரின் வழி நடத்துதல் தெளிவாய் இருந்தது. முகாம் தொடர்ந்து நடத்தப்படவும், தேவ நாமம் மகிமையடையவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். ஐக்கிய ஊழியர்கள் பலப்படவும், அற்புத அடையாளங்கள் ஐக்கியத்தில் நடைபெறவும் ஜெபியுங்கள். ஆமென் .

தேவனுக்கே மகிமை

பெண்கள் பகுதி

# மோசேயின் மனைவி சிப்போராளின் நற்குணங்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே, இந்த மாதத்தில் இச்செய்தியின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த லெந்து காலம் நமக்கு ஒரு பெரிய வளர்ச்சியைக் கொண்டு வரட்டும். இந்த மாதம் மோசேயின் மனைவி சிப்போராளின் நற்குணங்களைப் பற்றி இச்செய்தியில் தியானிப்போம்.

யாத்திராகமம் 2:16-22 வரை சொல்லப்பட்ட வசனத்தில் மோசேயின் மனைவி பற்றிக் கூறப்பட்டுள்ளது. மீதியான் தேசத்து ஆசாரியனுக்கு ஏழு குமாரத்திகள். இதில் சிப்போராள் ஒருத்தி. இவள் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தாள். தன் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டும்படிக்குத் தொட்டிகளை நிரப்பும் பொழுது அங்குள்ள மேய்ப்பர்கள் அவளைத் துரத்தினார்கள். மோசே அவளுக்குத் துணை செய்து ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான். இவ்வாறு உதவி செய்ததினால் அன்று சீக்கிரம் வீடு திரும்பினாள் சிப்போராள். அவள் தகப்பன் கேட்டபொழுது எகிப்தியன் ஒருவன் உதவி செய்ததினால் சீக்கிரம் வந்தேன் என்றாள். அவனைக் கூட்டிவா என்று சொன்ன போது அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தாள். மோசே அங்கு தங்க சம்மதித்தான். அவளுக்கு தன் மகள் சிப்போராளைத் திருமணம் செய்து கொடுத்தான். மோசே குடும்பமாக அங்கே தங்கினான்.

## முதலாவதாக தகப்பன் வீட்டு வேலை செய்து வந்த சிப்போராள் : யாத்.2:16

யாத்திராகமம் 2:10இல் கூறப்பட்டுள்ளது. தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டு தண்ணீர் காட்டும்படிக்கு தொட்டியில் தண்ணீர் நிரப்பினாள். சிப்போராளிடம் காணப்பட்ட உயர்ந்த கீழ்ப்படிதலான குணம் தகப்பன் வீட்டில் வேலை செய்தாள். அது காட்டிற்குச் சென்று தகப்பனுடைய ஆடுகளை சகோதரிகளோடு சேர்ந்து மேய்த்துக் கொண்டு வந்தாள். அதோடு மாத்திரம் இல்லை ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டத் தொட்டியை நிரப்பினாள். ஆடு மேய்க்கிற வேலையும், தண்ணீர் எடுத்துத் தொட்டியை நிரப்புகிற வேலையும் மிகவும் கடினமான வேலை. அதை சிப்போராள் செய்கிறாள். கடினமான வேலையென்று முறுமுறுத்ததாகவோ, அல்லது செய்யமாட்டேன் என்று சொன்னதாகவோ வேதத்தில் சொல்லப்படவில்லை. பெண்களாகிய நாம் யாராக இருந்தாலும் நம் அப்பா வீட்டிலும், கணவன் வீட்டிலும் நமக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளை சரியாக, சுறுசுறுப்பாக செய்ய வேண்டும். அப்படி நாம் செய்யும் பொழுது சிப்போராளை உயர்த்தி ஒரு பெரிய ஊழியக்காரரின் மனைவியாக ஆசீர்வதித்தது போல நம்மையும் ஆசீர்வதிப்பார். வாலிபப் பெண்கள் தன் பெற்றோர் வீட்டிலும், பெண்கள் தன் கணவர் வீட்டிலும் கடினமான வேலையாக இருந்தாலும் மனப்பூர்வமாகச் செய்து தம் குடும்பத்தை ஆசீர்வாதமான பாதையில் நடத்த கர்த்தர் உதவி செய்வாராக. ஆமென்.

## இரண்டாவதாக தன் தகப்பனுக்கு மனப்பூர்வமாக கீழ்ப்படிந்த சிப்போராள் : யாத்.2:19-21

யாத்.2:19ம் வசனத்தில் எகிப்தியன் எங்களுக்கு உதவி செய்து மேய்ப்பர்களுக்குத் தப்புவித்து ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான் என்றார்கள். அவனை வீட்டிற்கு அழைத்து வா என்று சிப்போராள் தகப்பன் சொன்னார். அவன் அங்கு தங்க சம்மதித்தான். அவனுக்கு தன் குமாரத்தி சிப்போரளை விவாகம் செய்து கொடுத்தான். அவளுக்கு ஒரு குமாரன் பிறந்தான். அவனுக்கு அந்திய தேசத்தில் பரதேசியாய் இருக்கிறேன் என்று சொல்லி கெர்சோம் என்று பெயரிட்டான். சிப்போராளும் அவளது சகோதரிகளும் மோசேயை ஒரு எகிப்தியன் என்கிறார்கள். மோசே எகிப்தியனா? எபிரேயனா? என்று தெரியாத ஒரு நபரை சிப்போராள் தன் கணவனாக ஏற்றுக் கொண்டாள். அப்பாவின் சொல்லுக்கு மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்தாள். அதனால் ஒரு தேவ மனிதனான மோசேயை கணவனாக பெற்றுக்கொண்டாள். தேவனோடு முகமுகமாய் பேசியவனாக, அவர் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன் என்றெல்லாம் கர்த்தரால் புகழப்பட்டான் மோசே. நாமும் நம் வாழ்வில் முதலாவது கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும். அடுத்து நம் பெற்றோர் சொல்லும் ஆலோசனைகளுக்கு நாம் கீழ்ப்படிந்து குடும்ப வாழ்க்கையை அமைக்கும் பொழுது அது மிகுந்த ஆசீர்வாதமான குடும்பமாகக் காணப்படும். சிப்போராளைப் போல ஏன், என்ன என்று கேள்விகளைக் கேட்காமல் பிள்ளைகளும், மனைவிமார்களும் கீழ்ப்படிய வேண்டும். கீழ்ப்படிதல் ஒரு பெரிய, மேலான ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும் கீழ்ப்படிவோம். ஒரு பெரிய ஆசீர்வாதம் பெறுவோம். ஆமென். அல்லேலூயா!

## மூன்றவதாக தன் கணவனுக்குக் கீழ்ப்படிந்த சிப்போராள் : யாத்.4:20

யாத்.4;19,20 மோசே மாமனாகிய எத்திரோவிடம் நான் எகிப்திற்குப் போய் தன் சகோதரர்களைப் பார்க்க வேண்டும் என்றான். எத்திரோ மோசேயை நோக்கி சுகமாய்ப் போய் வாரும் என்றான். மோசே தன் மனைவி, பிள்ளைகளையும் கழுதை மீது ஏற்றிக் கொண்டு எகிப்து தேசதிற்குத் திரும்பினான். மோசேயின் இரண்டாவது குமாரன் எலியேசர். சிப்போராள் தன் தகப்பன் வீட்டிலே வாழ்ந்து கொண்டிருந்தாலும் தன் கணவன் அழைத்தவுடன் அவருடன் செல்வதற்கு சம்மதித்தாள். மோசே இஸ்ரவேல் ஜனங்களை கானான் தேசத்திற்கு வழிநடத்திச் செல்லும் பிரயாணத்தில் மோசேயுடன் செல்கிறாள். மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எல்லாவற்றிலும் கீழ்ப்படியுங்கள். சிப்போராளைப் போல தேவனுக்கும், கணவனுக்கும் கீழ்ப்படிந்து தேவனுடைய அளவில்லாத ஆசீர்வாதத்தை குடும்பங்களில் பெறுவோம். சிப்போராளைப் போல கடினான வேலைகளை மனப்பூர்வமாய்ச் செய்வோம். சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும். ஆமென்.

எழுப்புதல் ஜெப ஐக்கியம், சுரண்டை.

# வேதாகமம் கூறும் கடைசிக்கால சம்பவங்கள்

## ஆசியாவிலிருக்கிற பெர்கமு சபை. வெளி. 2:12-17

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, கடைசிக்காலத்தில் ஆசியாவிலிருக்கிற மூன்றாவது சபையாகிய பெர்கமு என்ற சபையின் நிலையைக் குறித்து வெளி.2:12-17 வரை உள்ள வசனங்களை வாசித்து, தியானித்து நம்மில் உள்ள நிறைவுகளுக்காய் தேவனுக்கு நன்றி கூறி, குறைவுகளை கண்டறிந்து அதற்கு தக்கபடி, ஜெபத்துடன் நம்மை சீர்படுத்துவோமாக. ஆமென். இயேசுவின் வருகை மிக சமீபமாய் இருக்கிறபடியால், நாமும் ஆயத்தமாய் இருப்பது மட்டுமல்ல, நம்மோடு எல்லா ஜனங்களையும் கூட்டிச்சேர்க்கவும், காவலாளியாய் இருந்து செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வோமாக. பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்து நம்மை இன்னும் உற்சாகப்படுத்தி, நம்முடைய உலக கடமைகள் மத்தியில் ஆவிக்குரிய கடமைகளையும் சரியாய் செய்ய கிருபை செய்வாராக. சத்தியத்தை தொடர்ந்து தியானிப்போம். அப்போது நமக்கு ஓர் வெளிச்சம் பிரகாசிக்கும்.

பெர்கமு சபையின் தூதன் கூறுவது என்னவென்றால், வெளி.2:13ன்படி, நம்முடைய கிரியைகளை என்னவென்று ஆவியானவர் அறிந்திருக்கிறார். அந்த கிரியை எப்படிப்பட்டது என்று பார்க்கும் போது, சாத்தானுடைய சிங்காசனம் இருக்கும் இடத்தில் நம் குடியிருப்பு இருக்கிறது என்று வேதம் கூறுகின்றது. சாத்தானின் குடியிருப்பு மத்தியில் ஒருவர் குடியிருப்பு வைத்திருப்பது எவ்வளவு கடினம் என்பது நமக்குத் தெரியும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பின்வாங்காமல் விசுவாசத்தில் உறுதியாய் இருப்பதைக் குறித்து வேதம் விசேஷித்து கூறுகின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் இருந்தாலும் உறுதியாய் இயேசுவைப் பற்றிக் கொண்டு தொடர்ந்து வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம். விசுவாச ஜீவியத்தில் நாம் தளர்ந்து போகக்கூடாது. விசுவாச ஜீவியத்தில் நாம் நிலைத்திருக்கும் போது, ஆவியானவர் நம்முடைய வாழ்வில் தலையிட்டு இன்னும் சில குறைகளை உணர்த்திக் காட்டுவார். அவைகளை தொடர்ந்து தியானிப்போம்.

வெளி.2:14ம் வசனத்தை வாசிக்கும் போது, ஆகிலும் சில காரியங்களைக் குறித்து உன்பேரில் எனக்குக் குறை உண்டு என்றும், விக்கிரகங்களுக்கு படைத்தவைகளைப் புசிப்பதற்கும், வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர் முன்பாக போடும்படி பாலாக் என்பவனுக்கு போதனை செய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்தில் உண்டு என்று வேதம் கூறுகின்றது. இப்படிப்பட்ட குறைகள் யாரிடத்தில் காணப்பட்டாலும் நம்மை பரிசுத்தப்படுத்துவது நமது கடமையாகும். பரிசுத்த வாழ்வு வாழ தேவன் அழைத்துள்ளார். நீதியுள்ளவர்கள் இன்னும் நீதி செய்யப்படும். பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் என்று வெளி. 22:11ம் வசனத்தில் பரிசுத்தத்தின் மேலான அவசியத்தை நாம் உணர முடிகிறது. ஆகவே நாம் அனைவரும் மேலான பரிசுத்த்தை விரும்புவோம். தேவன் வழி நடத்துவாராக.

அன்பானவர்களே, நாம் விசுவாசத்தை மறுதலியாமல் இதுவரை நடந்ததைவிட இன்னும் மேலான சத்தியத்தை தேவன் வெளிப்படுத்துவார். மேலும் வெளி.2:15ம் வசனத்தை வாசிக்கும் போது, நிக்கொலாய் மதஸ்தருடைய போதகத்தை கைக்கொள்ளுகிறர்வகளும் உன்னிடத்தில் உண்டு. அதை நான் வெறுக்கிறேன் எனறு வசனம் கூறுகிறடியால், தேவன் வெறுக்கிற மற்ற விக்கிரக கட்டுகள் நம்மிடம் இருக்குமானால் அதை விட்டுவிட தேவன் நமக்கு உதவி செய்வார். கர்த்தர் வெறுக்கிற காரியம் நமக்கு பிரியமாய் இருக்கிறதா என்று நம்மை பரிசோதிக்க வேண்டும். அதை விட்டுவிட வேண்டும். நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம் பண்ணுவேன் என்று வெளி.2:16ல் வாசிக்கின்றோம். இவ்விதமாக நம்மை நாமே பரிசுத்தமாக்கிக் கொள்ளுவோமாக ஆமென்.

இவ்விதமாக தேவனுக்குப் பிரியமாய் வாழும்போது, வெளி.2:17ன்படி நமக்கு மறைவான மன்னாவை புசிக்கக் கொடுத்து, நமக்கு ஜெயத்தைத் தருவார். ஜெயம் மட்டுமல்ல, நமக்குப் புதிய நாமத்தையும் கொடுக்கின்றார். மேலே சொல்லப்பட்ட ஆசீர்வாதங்கள் யாவும், நமக்கு கிடைக்க வேண்டுமானால், பாவமில்லாத பரிசுத்த வாழ்வை நாம் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். வேதமே நமக்கு வெளிச்சம். அனுதினமும் ஜெபித்தால் தேவன் நமக்குள் கிரியை செய்து, நம்மை அதிசயமாய் வழி நடத்துவார்.

அன்பானவர்களே, இக்கடைசிக் காலத்தில் நாம் வேத வசனத்தை மிகவும் அதிகமாய் வாசிக்கவும், நம்முடைய ஆவியிலே இணைந்து செல்லும் ஊழியர்களுடன் சேர்ந்து ஜெபிக்க வேண்டும். அப்போது பரிசுத்த ஆவியின் அபிஷேகம் நமக்கு கிடைக்கும். அந்த அபிஷேகம் சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்தும். மாம்சமான யாவர் மேலும் என் ஆவியயை ஊற்றுவேன் என்ற வார்த்தையின்படி நாம் ஆவியை மட்டுமல்ல, அனைத்து வரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். வரங்கள் பெற்று வல்லமையாய் ஊழியம் செய்ய தேவன் நம்மை அழைத்துள்ளார். நமக்கு சோர்வு இருந்தாலும், மீண்டும் ஊக்கமாய் ஜெபிப்போம். தேவன் நம்மை விசேஷித்த கிருபையால் நிரப்புவார். கடைசிக்கால எழுப்புதலுக்கு நம்மை ஆயத்தப்படுத்துவோமாக. தேவன் சகலவித கிருபையாலும் நம்மை நிரப்புவார். ஆமென்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்,** சுரண்டை.

## 45-வது ஆண்கள் தியான முகாம்

இடம்: ஜெப ஐக்கிய ஜெபக்கூடாரம், சுரண்டை
நாள்: 2024, மே மாதம் 2,3,4 வியாழன், வெள்ளி, சனி

தேவ செய்தி :

**Bro. T.சாம் அற்புதராஜ்**

**Bro. P.D.ஞானப்பிரகாசம்**

**மற்றும் ஐக்கிய ஊழியர்கள்**

ஆண்கள் ஜெபத்துடன் இம்முகாமில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

### ஜெப விண்ணப்பங்கள்:

1. ஆண்கள் அநேகர் தடையின்றி கலந்து கொள்ளவும்.
2. முகாமிற்கு விரோதமாய் கிரியை செய்யும் சாத்தானின் திட்டங்கள் அழிய.
3. ஊழியர்களைத் தேவன் புதுக்கிருபையுடன் பயன்படுத்த.
4. அபிஷேகமே முகாமை நடத்திச் செல்ல
5. முகாமை நடத்த ஊழியர்களுக்கு தேவ ஞானம் கிடைக்க.
6. ஆண்கள் நீண்ட காலம் ஊழியம் செய்யும் கிருபையைப் பெற்றுக் கொள்ள
7. முன் ஆயத்தங்கள் சிறப்பாக அமைய ஜெபியுங்கள்

### குறிப்பு :

1. ஐக்கியத்திற்காய் அதிகம் ஜெபித்து, ஊழியத்தில் பங்கு பெறுங்கள்.
2. பத்திரிக்கையை அநேகருக்கு அறிமுகம் செய்யுங்கள்.
3. உங்கள் செல்போன் எண்ணை ஐக்கியத்திற்குத் தெரிவியுங்கள்.
4. உங்கள் பிரச்சனைகளுக்காக ஜெபிப்போம்
5. உங்கள் ஜெபம் ஐக்கியத்திற்கு தினமும் தேவை.
6. தேவன் உங்களை அழைத்தால் ஐக்கிய ஊழியங்களை உங்கள் பகுதியில் செய்யுங்கள்.
7. இம்மாதம் அனைத்து ஊழியங்களும் அபிஷேகத்துடன் நடைபெறும்.
8. ஐக்கியத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டவர்கள் பிறரையும் இரட்சிப்பிற்குள் வழி நடத்துங்கள்.
9. எழுப்புதல் TV என்ற சேனல் முகவரியில் YOU TUBE ஊழியம் நடைபெற்று வருகின்றது.

தொடர்புக்கு: **90255 53614, 99429 50132**

## நடப்புச் செய்திகள்.

1. முன்னாள், இன்னாள் அமைச்சர்களின் வழக்குகளை யார் விசாரிப்பது என்பது குறித்து முடிவெடுக்கும் பொறுப்பை சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியிடம் ஒப்படைப்பதாக உச்ச நீதிமன்றம் அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளது
2. கைபர் - பக்துன்க்வா மாகாணம், தேரா இஸ்மாயில் கான் மாவட்டத்தில் உள்ள போலீஸ் நிலையம் மீது, தீவிரவாதிகள் நேற்று திடீரென தாக்குதல் நடத்தினர். போலீஸ் நிலையத்திற்கு உள்ளே சென்றும் தாக்குதல் நடத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் 10 போலீசார் கொல்லப்பட்டனர். 6 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
3. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரை தொடங்கி வைத்து கூட்டுக் கூட்டத்தில் கடந்த 31ம் தேதி உரையாற்றிய ஜனாதிபதி முர்மு, தேர்வு முறைகேடுகள் குறித்த இளைஞர்களின் கவலைகளை அரசு அறிந்திருப்பதாகவும், இந்த முறைகேடுகளை கடுமையாக கையாள புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்றார்.
4. உலக புகழ் பெற்ற சாம்சங் எலெக்ட்ரானிக்ஸ் கம்பெனியின் தலைவர் லீஜே யோங் (56) 2015ம் ஆண்டு சாம்சங் சி அண்ட் டி நிறுவனம் செய்ல் என்ற நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது. அவர் பங்கு விலைகளை அதிகரித்து காட்டியும், கணக்கு வழக்குகளில் மோசடியும் செய்துள்ளார் என குற்றச்சாட்டு எழுந்தது. இந்நிலையில் இந்த வழக்கில் இருந்து லீ ஜே யோங்கை நீதின்றம் 5-2-2024 அன்று விடுதலை செய்தது.
5. மாலத்தீவு நாடு நீண்ட காலமாக இந்தியாவுக்கு ஆதரவாக செயல்பட்டு வந்தது. கடந்த நவம்பரில் நடந்த அதிபர் தேர்தலில் சீனாவுடன் மிக நெருக்கமானவரான முமது முய்சு வெற்றி பெற்றார் அவர் வெற்றி பெற்றதும், மாலத்தீவில் உள்ள 88 இந்திய ராணுவத்தினரை வாபஸ் பெற வேண்டும் எனறு இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.
6. நடப்பு நிதியாண்டில் ₹.78,673 கோடி கூடுதல் செலவினத்திற்கான துணை மானிய கோரிக்கைகள், மக்களவையின் ஒப்புதலுக்காக நேற்று தாக்கல் செய்யப்பட்டன.
7. ரஞ்சி கோப்பை தொடரின் எலைட் சி பிரிவு 5வது சுற்று ஆட்டத்தில் கோவா அணியை 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்திய தமிழ்நாடு, புள்ளிப் பட்டியலில் முதலிடம் வகிக்கிறது.

**"உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாகிறபடியினாலே..." ரோமர் 1:8**

## உலகமெங்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட...

1. லூக்கா 8:39 இயேசு அவனை நோக்கி, தேவன் உனக்குச் செய்தவைகளையெல்லாம் அறிவி... உலகமெங்கும் விசுவாசிகள் தாங்கள் பெற்றுக் கொண்ட தேவ ஆசீர்வாதங்களை சாட்சியாய் அநேகருக்கு பகிர்ந்து கொள்ளவும், இதனால் உலக மக்கள் இயேசுவை அறிந்து கொள்ள ஜெபிப்போம்.
2. II இராஜாக்கள் 5:15 இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத் தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன். நாகமான் தன்னுடைய சாட்சியை மற்றவர்களுக்கு அறிவித்தது போல, இயேசுவினால் சுகமடைந்தவர்கள் யாவரும் தங்கள் சாட்சியை இன்னும் அநேகர் மத்தியில் தைரியமாய் அறிவிக்க ஜெபிப்போம்.
3. அப்.9:15 அவன் (சவுல்) புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக, நான் தெரிந்து கொண்ட பாத்திரமாய் இருக்கிறான். சவுல் போல் அழைப்பு பெற்ற யாவரும் மற்றவர்களுக்கு சுவிஷேசத்தை பிறருக்கு தீவிரமாய் அறிவிக்க ஜெபிப்போம்.
4. ஆதி.12:1 கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்திற்குப் போ என்றார். ஆபிரகாமைப் போல அனைத்து ஊழியர்களுக்கும், போக வேண்டிய வழியை தேவன் கட்டளையிடவும், ஒவ்வொருவருக்கும் ஊழியப் பாதையை தேவன் இன்னும் வெளிப்படுத்தவும் ஜெபிப்போம்.
5. யாத்.3:3 நான் (மோசே) கிட்டப்போய், இந்த அற்புதக்காட்சியைக் காண்பேன். மோசே போல, தேவனுடைய காரியத்தில் யாவருக்கும் இன்னும் வாஞ்சை உண்டாகவும், இதனால் சுவிசேஷம் தீவிரமாய் யாவருக்கும் சென்றடையவும், தடைகள் இருந்தால் அவைகள் முற்றிலும் நீங்கிப் போகவும் ஜெபிப்போம்.
6. நெகேமியா 6:15 அப்படியே, அலங்கமானது ஐம்பத்திரண்டு நாளைக்குள்ளே கட்டப்பட்டு... நெகேமியா நாட்களில் அலங்கம் கட்டப்பட்டது போல, உலகமெங்கும் உள்ள விசுவாசிகள் தரிசனத்துடன் வேலை செய்யவும், தேவன் அவர்களை வல்லமையாய் பயன்படுத்தவும், அழைக்கப்பட்ட அழைப்பில் உறுதியாய் நிற்கவும், உலக மக்கள் மனந்திரும்ப சுவிசேஷம் அறிவிக்கப்பட ஜெபிப்போம்.
7. சங்கீதம் 71:18 இப்பொழுதும் தேவனே, இந்த சந்ததிக்கு உமது வல்லமையையும், வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் அறிவிக்கும் அளவும் என்னை கைவிடாதிரும். தாவீதுக்கு இருந்த இந்த வாஞ்சை உலகமெங்கிலும் உள்ள ஊழியர்களுக்கு இன்னும் சென்றடைய ஜெபிப்போம்.
8. ஏசாயா 6:8 பின்பு யாரை நான் அனுப்புவேன். இதோ, அடியேன் இருக்கிறேன். என்னை அனுப்பும் என்றேன். ஏசாயா போல் மனப்பூர்வமாய் ஊழியம் செய்வதற்கு தங்களை அர்ப்பணிப்பவர்கள் ஏராளமாய் எழும்பவும், உலகமெங்கும் அவர்கள் வாஞ்சையுடன் ஊழியம் செய்யவும், சுவிசேஷம் விரைந்து சென்று எழுப்புதலை நாம் காணவும் ஜெபிப்போம்.
9. மத்தேயு 9:37 இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி, அறுப்பு மிகுதி. வேலையாட்களோ கொஞ்சம் என்றார். உலகமெங்கம் உள்ள ஊழியர்கள் பற்றாக்குறை நீங்கவும். போதுமான ஊழியர்களை தேவன் எழுப்பவும். இயேசுவின் வருகைக்கு ஊழியர்கள் யாவரையும் ஆயத்தப்படுத்தவும், புதிய ஊழிய வாசல்கள் திறக்கப்படவும், அனுகூலமான சூழ்நிலைகள் உலகமெங்கும் உண்டாகவும் ஜெபிப்போம்.
10. மாற்கு 16:19 இவ்விதமாய் கர்த்தர் அவர்களுடனே பேசின பின்பு. இவ்வசனத்தின்படி கர்த்தர் யாவருடனும் பேசவும், இதனால் அனைவரும் சுவிசேஷகர்களாய் மாறவும், இப்படிப்பட்ட ஞான எழுப்புதல் உலகமெங்கும் உண்டாகவும், இதற்குத் தடையை கொண்டு வரும் பிசாசின் கிரியைகள் அழிக்கப்படவும், சோர்ந்து போகாமல் சுவிசேஷ ஊழியங்கள் தேசமெங்கும் நடைபெறவும் ஜெபிப்போம்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்,** சுரண்டை.

## உலக எல்லையையும், ஊழிய எல்லையையும் விரிவாக்கும் அபிஷேகம் - 134

**கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே,** இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள் கூறுகின்றேன். அபிஷேகம் மூலம், நமக்கு உலகப்பிரகாரமான எல்லையையும், ஊழிய எல்லைகளையும் விரிவாக்கம் செய்ய முடியும். நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பிரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும், அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் (மத்தேயு 28:19,20). அபிஷேகம் பெற்று உலக எல்லையையும், ஊழிய எல்லையையும் விரிவாக்கம் செய்த ஆபிரகாமைப் பற்றி தியானிப்போம்.

### 1. உலக எல்லையை விரிவாக்கம் செய்த ஆபிரகாம் :

ஆபிரகாம் தேவனால் அழைக்கப்பட்ட ஒரு தேவ மனிதன் ஆவார் (ஆதி.20:17). நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ (ஆதி.12:1,4) என்று கர்த்தர் அழைக்கும் போது, நிபந்தனையின்றி கீழ்ப்படிந்தான் என்று வேதம் கூறுகின்றது. அப்போது ஆபிரகாமுக்கு இருந்த நிலம் எவ்வளவு என்று பார்க்கும் போது, ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமல் இருக்கையில், அவனுக்குப் பிள்ளையில்லாமல் இருக்கும் போது உனக்கும், உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் இதை சுதந்திரமாகத் தருவேன் என்று அவனுக்கு தேவன் வாக்குப் பண்ணினார் (அப்.7:5). ஒரு அடி நிலம் கூட இல்லாத ஆபிரகாமுக்கு தேவன் கொடுக்கும் அசீர்வாதம் என்னவென்று வேதத்தில் நாம் வாசிக்கும் போது, ஆபிரகாம் மிருக ஜீவன்களும் வெள்ளியும், பொன்னுமான ஆஸ்திகளை உடையவனாய் இருந்தான் என்றும், ஆபிரகாம், லோத்து இவர்களின் ஆசீர்வாதம் பூமி அவர்களைத் தாங்கக்கூடாததாய் இருந்தது என்றும் ஆதி.13:6ல் நாம் வாசிக்கிறோம். அதுமட்டுமல்ல கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருநது வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப் பார், நீ பார்க்கிற இந்த பூமி முழுவதையும் நான் உனக்கும், உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுப்பேன் என்றும் தேவன் வாக்குப் பண்ணினார். அப்படியே செய்து முடித்தான். ஆதி. 13:14,15 ஆபிரகாம் அபிஷேகம் பெற்றிருந்தபடியால், உலகப்பிரகாரமாகவும் அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டார். நீங்களும் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டால், உலகப்பிரகாரமாகவும் அதிகமாக ஆசீர்வதிக்கப்படுவீர்கள். உலக மனிதனை நோக்க வேண்டாம். இயேசுவை மட்டும் பார்த்து வாழ்வோம். ஒரு அடி நிலம் இல்லாதவர்களும் செல்வச் சீமானாக மாற்ற தேவனால் கூடும்.

### 2. ஆவிக்குரிய எல்லையை விரிவாக்கம் செய்த ஆபிரகாம் :

உலகப்பிரகாரமான எல்லையில் ஆபிரகாம் பெரியவரானது மட்டும் அல்ல. தன் ஆவிக்குரிய எல்லையையும் பெரிதாக்கிக் கொண்டார். ஆமென். இவர் தனது மகன் ஈசாக்கிற்கு திருமணத்திற்கான குறிப்புகளை தனது மூத்த ஊழியக்காரரிடம் சொல்லும் போது, அதில் அபிஷேகம் நிறைந்துள்ளதை வேதத்தில் வாசிக்கிறோம். அது என்னவென்றால், நாம் குடியிருக்கிற கானானியருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண் கொள்ளாமல், நீ என் தேசத்திற்கும் என் இனத்தாரிடத்திற்கும் போய் என் குமாரனாகிய ஈசாக்கிற்கு பெண் கொள்வேன் என்று, வானத்திற்கு தேவனும், பூமிக்கு தேவனுமாகிய கர்த்தர் பேரில் எனக்கு ஆணையிட்டுக் கொடுக்கும்படிக்கு, நீ உன் கையை என் தொடையின் கீழ் வை என்று சொன்னதாக ஆதி. 24:4ம் வசனத்தில் வாசிக்கின்றோம். தேவ அபிஷேகம் இல்லாவிட்டால, இப்படிப்பட்ட வார்த்தையை யாரும் கூற முடியாது.

மேலும் லூக்கா 16:19-31 வரையுள்ள வசனங்களைப் பார்க்கும் போது, ஆவிக்குரிய எல்லையை பெருக்கிக் கொண்ட ஆபிரகாமைப் பற்றி நாம் நன்கு அறிய முடியும். ஐசுவரியவன் பாதாளத்தில் இருக்கும்போது, தனது சகோதரர்கள் வேதனையுள்ள இந்த இடத்திற்கு வராதபடிக்கு, இங்கிருந்து ஊழியர்கள் செல்ல வேண்டும் என்று கூறும்போது, அவர்களுக்கு மோசேயும், தீர்க்கத்தரிசியும் அங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கு அவர்கள் செவி கொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து போனாலும் நம்ப மாட்டார்கள் என்று தன்னுடைய எல்லையின் வரிவாக்கத்தை ஆபிரகாம் தெளிவாகக் கூறியதாக வேதம் கூறுகின்றது.

அன்பானவர்களே, ஒரு மனிதனுக்குள் அபிஷேகம் வரும்போது, அது உலகப்பிரகாரமான ஆசீர்வாதத்தையும், ஆவிக்குரிய ஆசீர்வாதத்தையும் இணைத்து நமக்குக் கொண்டு வரும். சிலர் அபிஷேகம் பெற்றால் ஆவிக்குரிய நன்மையை மாத்திரம் கொண்டு வரும் என்று கூறுவார்கள். அது தவறான கருத்தாகும். ஆவிக்குரிய ஆசீர்வாதத்துடன், உலகப்பிரகாரமான ஆசீர்வாதத்தையும் அபிஷேகம் கொண்டு வரும். நாம் யாரும் குறைவு உள்ளவர்களாய் காணப்படக்கூடாது, தேவன் நம்மைக் கைவிடமாட்டார் வழி நடத்துவார். ஆசீர்வாதத்திற்கு எந்த மனிதனும் முதலில் தேவனிடம் மன்றாட வேண்டும். தடைகள் நீக்கி கர்த்தர் நம்மை நடத்துவார். அபிஷேகத்தை மட்டும் நாம் இழந்து விடக்கூடாது. சீடர்கள் அபிஷேகம் பெற்றபோது இயேசு அவர்களை ஆசீர்வதித்து உலகம் முழுவதும் பயன்படுத்தியது போல நம்மையும் வல்லமையாய் பயன்படுத்துவார். அனைத்து எல்லையையும் தேவன் நமக்கு ஆசீர்வதிப்பார். ஆமென்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்,** சுரண்டை.

Registrar of Newspapers for India,
Registration 71982/98, New Delhi

TN/WPP-168/SR/2024-2026
Licenced to Post without prepayment
Posted at Surandai on 27th 28th of every month

Postal Registration Number of R.N.P,KOL /005/2024-2026
Date of Publication : February 26,2024
Date of Posting : February 27,2024 Posted at Surandai

# வேதத்தின் மகத்துவங்களில்... சில...

## "எச்சரிக்கையாய் இருங்கள்"

இயேசு கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, நாம் அன்றாடம் பயன்படுத்தும் வேதாகமம் அநேக நேரங்களில் நம்முடைய பிரயோஜனத்துக்காய் நம்மை எச்சரிக்கிறது. அந்த எச்சரிப்பு நமக்குத் தேவையில்லை என்று எண்ணாமல் நமக்கு நன்மைக்காகவே என்று எண்ண வேண்டும். வேதத்தில் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்துதல் வரை எச்சரிப்பு வார்த்தையும் கொடுக்கப்பட்டுள்ளது. அவைகளில் சில எச்சரிப்புகளை இச்செய்தியில் தியானிப்போம்.

1. **ஏரோதினிடத்துக்கு திரும்பிப் போக வேண்டாம் என்று எச்சரிக்கும் வேதம் :** மத்தேயு 2:12

சாஸ்திரிகள் இயேசு பாலகனை தரிசித்து காணிக்கை செலுத்தி வரும் போது, அவர்கள் ஏரோதினிடதிற்குத் திரும்பிப் போக வேண்டாமென்று சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு, வேறு வழியாய் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள் என்று வேதம் கூறுகின்றது (மத்தேயு 2:12). காரணம் என்னவென்றால் இயேசுவின் பிறப்பு ஏரோது இராஜாவுக்கு கோபத்தைக் கொண்டு வந்தது. இந்த எச்சரிப்பு சாஸ்திரிகளுக்கு கிடைக்காவிட்டால் சாஸ்திரிகளையும் எரோது கொலை செய்து விடுவான். இதுபோல், நாம் தேவனுடைய பிள்ளைகளாய் மாறியது சாத்தானுக்கு பிடித்தமாய் இராது. இரட்சிக்கப்பட்ட நாம் அனைவரும் சாத்தானின் தந்திரங்களை அறிந்து வேறு வழியில் தேவன் நமக்குக் காட்டும் பாதையில் செல்ல அழைக்கப்பட்டிருக்கிறோம்.

2. **காணிக்கையைக் குறித்து எச்சரிக்கும் வேதம் :** மத்தேயு 6:1

மனுஷர் காணவேண்டுமென்று, அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தை செய்யாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். நாம் பல்வேறு விதங்களில் ஊழியங்களுக்கு காணிக்கை கொடுத்து வருகின்றோம். காணிக்கை கொடுப்பது நமக்கு ஒரு ஆசீர்வாதம். மனிதர்கள் பார்க்க வேண்டும் என்று எண்ணி காணிக்கை கொடுப்பது தேவனுக்கு ஏற்புடையது அல்ல. இந்த நாட்களில் மறைவாய் காணிக்கை கொடுக்க நாம் பழகிக் கொள்ள வேண்டும். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தன்னுடைய அரண்மனையைக் குறித்து, இது என் வல்லமையின் பராக்கிரமத்தால் கட்டிய மகா பாபிலோன் என்று பெருமையாய்ப் பேசினதினால் வெளியில் மாடுகளைப் போல் புல்லை தின்கிறவனனான் என்று தானியேல் 4:32ல் வாசிக்கின்றோம். நாம் எதைச் செய்தாலும் மனுஷர் காணவேண்டுமென்று செய்யாமல் தேவ நாம மகிமைக்காக செய்வோமானால் அது நமக்குப் பெரிய ஆசீர்வாதமாய் இருக்கும்.

3. **உபதேசத்தை குறித்து எச்சரிக்கும் வேதம் : I** தீமோத்தேயு 4:16

நாம் யாவரும் தேவ ஊழியர்கள். நாம் ஜனங்களுக்கு உபதேசம் பண்ண அழைக்கப்பட்டிருக்கின்றோம். நம்முடைய அழைப்பு என்ன? என்றும் நாம் எப்படி உபதேசம் பண்ண வேண்டும் என்கிற கிருபை நமக்கு வேண்டும். தேவன் நமக்கு வைத்திருக்கும் அழைப்பை அறிந்து ஜெபத்துடன் சரியான உபதேசத்தைச் செய்யும் போது, நம் மூலம் தேவன் ஜனங்களின் இருதயங்களை தொடுவார். இப்படியாக வேதாகமம் முழுவதும் ஏராளமான எச்சரிக்கும் வசனத்தை நாம் வாசித்து தியானிக்க வேண்டும். அதன்படி எச்சரிக்கையாய் வாழ ஜெபித்து அர்ப்பணிக்க வேண்டும். ஆமென்.

*If undelivered please return to....*

**Bro.P.Duraisingh Gnanapragasam**
14-6-3(34) Ratna Complex, SURANDAI - 627 859.
Tenkasi (Dt), Tamil Nadu, India.
www.revival.org.in
Cell: 90255 53614, 99653 36459, 9942950132
Ph: 04633-290480

To.
Bro/Sis ____________________
____________________
____________________
Pin

Printed by P.Thanapaul, Published by P.Duraisingh Gnanapragasam owned by P.Duraisingh Gnanapragasam and Printed at Ravi Printers, 10-7-16 Bus-Stand Road, Surandai - 627 859. Tenkasi (Dist) and published at 14-6-3(34), Ratna Complex, Surandai - 627 859. Tenkasi (Dist) Editor P.Duraisingh Gnanapragasam.